முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகம்

## மட்டம் 02 பரீட்சை – 2026 யூலை

## (2804) வணிக முகாமைத்துவம்

(Business Management)

2026-07-26
பிற்பகல்
[01.45 – 05.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள **விடைப் புத்தகத்தில்** நீங்கள் விண்ணப்பித்த **மொழி மூலத்திலேயே விடைகள்** எழுதப்படல் வேண்டும்.*

(4) *ஏதாவது எடுகோள்களை நீங்கள் மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்** அவற்றின் **வரைவிலக்கணங்களுடன்** இணைக்கப் பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு **செயல் வினைச் சொல்லை** கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.5** வரையான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றில் எது முகாமைத்துவச் செயன்முறையின் பிரதான தொழிற்பாடுகளைச் (functions) சிறப்பாக வகைகுறிக்கிறது?

(1) பணியமர்த்தல், பயிற்சி, சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை செய்தல்.

(2) திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல் மற்றும் கட்டுப்படுத்தல்.

(3) பாதீடிடல், கணக்கீடு, கணக்காய்வு மற்றும் அறிக்கையிடல்.

(4) வடிவமைத்தல், உற்பத்தி செய்தல், பொதியிடல் மற்றும் விநியோகித்தல்.

**1.2** சரியானதைச் செய்வது (doing the right things) என்பது:

(1) பயனுறுதித்தன்மை
(2) வினைத்திறன்
(3) உற்பத்தித்திறன்
(4) அபிவிருத்தி.

**1.3** சுற்றுலா ஹோட்டல் ஒன்றில், முகப்பு அலுவலக மேற்பார்வையாளர் (Front Office Supervisor) வரவேற்பாளர்களை நேரடியாகக் கண்காணிக்கிறார், தினசரிப் பணிகளை ஒதுக்கீடு செய்கிறார், விருந்தினர்களுக்கு முறையாகச் சேவை வழங்கப்படுவதை உறுதி செய்கிறார். அத்துடன் செயற்பாட்டுப் பிரச்சினைகள் பற்றி அந்தந்த திணைக்கள முகாமையாளருக்கு அறிக்கை செய்கிறார்.

நிறுவனப் படிநிலையில் (organizational hierarchy), பின்வரும் எந்த முகாமையாளர்கள் வகைகள், முகப்பு அலுவலக மேற்பார்வையாளருக்கு உரியதாகவுள்ளது?

(1) உயர் மட்ட முகாமையாளர்
(2) இடை மட்ட முகாமையாளர்
(3) கீழ் மட்ட முகாமையாளர்
(4) தந்திரோபாய மட்ட முகாமையாளர்.

**1.4** தீர்மானமெடுத்தல் என்பது முகாமைத்துவத்தில் முக்கியமானதொன்றாகக் கருதப்படுகிறது, ஏனெனில்:

(1) இது வணிகச் செயற்பாடுகளில் உள்ள அனைத்து இடர்களையும் நீக்குகிறது.
(2) இது ஊழியர்கள் உத்தரவுகளை கண்டிப்பாகப் பின்பற்றுவதை உறுதி செய்கிறது.
(3) இது மாற்று வழிகளில் சிறந்த நடவடிக்கை முறையைத் தேர்ந்தெடுக்க முகாமையாளர்களுக்கு உதவுகிறது.
(4) இது நிறுவனங்களின் அனைத்து இழப்புகளையும் (losses) நீக்குகிறது.

**1.5** பின்வருவனவற்றில் எது ஒழுங்கமைத்தல் செயன்முறையின் ஒரு படிமுறையாகக் **கருதப்படவில்லை**?

(1) கடமைகளை ஒதுக்கீடு செய்தல்
(2) ஊக்கப்படுத்தல்
(3) திணைக்களப்படுத்தல்
(4) வேலையை அடையாளங் காணலும் வேலைப் பிரிப்பும்

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

*இல. **1.6** தொடக்கம் **1.8** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவு செய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.6** அதிகாரம் (Power) என்பது இணங்கிக் கொள்ளப்பட்ட எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப, செயலாற்றுகையை வெளிப்படுத்துவதற்கும் அதற்கான பொறுப்பை ஏற்பதற்குமான கடப்பாடாகும்.

**1.7** முகாமையின் எதிர்பார்ப்பு என்பது கட்டுப்படுத்தலில் கருத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு காரணி ஆகும்.

**1.8** ஒரு தலைவர் பிரதானமாக மக்களுக்கு உத்வேகம் அளிப்பதில் கவனம் செலுத்தும் அதே வேளை ஒரு முகாமையாளர் பணிகளைத் திட்டமிடுவதிலும் கட்டுப்படுத்துவதிலும் கவனம் செலுத்துகிறார்.

(01 புள்ளி வீதம், 03 புள்ளிகள்)

*வினா இல. **1.9** தொடக்கம் **1.10** வரை உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கு, அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொல் / சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட சொல்/ சொற்களை உங்கள் விடைப் புத்தகத்தில் எழுதவும்.*

**1.9** செய்தி அனுப்புபவர் அவர் உத்தேசித்த ………… *(சரியான / அருகிலுள்ள)* நபருக்கு அந்தச் செய்தி சென்றடைய வேண்டும் என்பதே பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்கு அவசியமானதாகும்.

**1.10** பலம் மற்றும் பலவீனங்கள் என்பன SWOT பகுப்பாய்வின் ………… *(உள்ளகக் / வெளிப்புறக்)* காரணிகளாகும்.

(01 புள்ளி வீதம், 02 புள்ளிகள்)

*இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப் புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதவும்.*

**1.11** ஊக்கமிழந்த பணியாளர் ஒருவரின் இரண்டு (02) அறிகுறிகளைக் (signs) குறிப்பிடுக.

**1.12** "பண்டக்குறியிடல் (Branding)" என்பதாற் கருதப்படுவது யாதெனச் சுருக்கமாக விவரிக்க.

**1.13** "அதிகாரம் (Authority)" மற்றும் "பொறுப்பு (Responsibility)" ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடுக.

**1.14** ஒரு நல்ல தந்திரோபாயத்தின் (good Strategy) இரண்டு (02) பண்புகளைக் (attributes) குறிப்பிடுக.

**1.15** மனித வள முகாமைத்துவத்தின் இரண்டு (02) நோக்கங்களைக் (objectives) குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், 10 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 02

**ABC Foods** என்பது ஒரு பிரபலமான துரித உணவுச் சங்கிலி நிறுவனமாகும். வாடிக்கையாளர்களின் விருப்பங்கள் ஆரோக்கியமான உணவுகள் மற்றும் விரைவான விநியோகத்தை நோக்கி மாறி வருவதை இந்நிறுவனம் அவதானித்துள்ளது. இதன் முகாமையானது வினைத்திறனையும் வாடிக்கையாளர் திருப்தியையும் பேணிக் கொண்டு, இத்தகைய மாற்றங்களை எதிர்கொள்ள அதன் செயற்பாடுகள், சந்தைப்படுத்தல் மற்றும் செயன்முறைகளை மாற்றியமைக்க வேண்டும்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **ABC Foods** இற்கான ஒரு வெற்றிகரமான மாற்றத்தின் இரண்டு (02) பரமானங்களைக் (parameters) **குறிப்பிடுக**. (02 புள்ளிகள்)

(b) **ABC Foods** இற்கான திட்டமிடலின் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) மாற்றங்களை பயனுறுதிமிக்க வகையில் முகாமை செய்ய உதவக்கூடிய **ABC Foods** இற்கான ஒழுங்கமைப்பின் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட ஏபீசீ நிதிக் கம்பனி** 120 ஊழியர்களைக் கொண்ட ஒரு வளர்ந்துவரும் நிதிக் கம்பனி ஆகும். இக்கம்பனி வாடிக்கையாளர் சேவைகளை மேம்படுத்தவும் செயன்முறைப்படுத்தல் நேரத்தைக் குறைக்கவும் சமீபத்தில் டிஜிடல்மயப்படுத்தப்பட்ட கடன் அங்கீகார முறைமையை அறிமுகப்படுத்தியது. இந்தத் தந்திரோபாயத்திற்கு ஆதரவளிக்க, முகாமையானது வாடிக்கையாளர் உறவுகள், இடர் பகுப்பாய்வு மற்றும் டிஜிடல் செயற்பாடுகளுக்காக தனித்தனிக் குழுக்களை உருவாக்கி, நிறுவனக் கட்டமைப்பை மாற்றியமைத்தது. எவ்வாறாயினும், தெளிவற்ற அறிக்கையிடல் வழிமுறைகள் மற்றும் சில மேற்பார்வையாளர்களின் எதிர்ப்பு போன்ற காரணங்களால் ஊழியர்கள் தொடர்பாடல் சிக்கல்களுக்கு முகங் கொடுத்தனர். செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக பயிற்சி, குழு வேலை மற்றும் பங்கேற்புத் தலைமைத்துவம் ஆகியவற்றின் ஊடாக தமது பணியாளர்களை ஊக்குவிக்குமாறு பிரதம நிறைவேற்று அதிகாரி (CEO) முகாமையாளர்களை ஊக்கப்படுத்துகிறார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) மேற்படி விவரணத்தைப் பயன்படுத்தி, நிறுவனத் தந்திரோபாயத்திற்கும் நிறுவனக் கட்டமைப்புக்கும் இடையிலான தொடர்பை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ஏபீசீ நிதிக் கம்பனி**யின் ஒரு வெற்றிகரமான தலைவராக CEO இற்கு உதவக் கூடிய இரண்டு (02) தலைமைத்துவச் சிறப்புக் காரணிகளை (leadership excellence factors) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) மேற்படி விவரணத்தில், **வரையறுக்கப்பட்ட ஏபீசீ நிதிக் கம்பனி** எதிர்கொள்ளும் பயனுறுதிமிக்க தொடர்பாடலுக்கான இரண்டு (02) தடைகளைக் (barriers) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**Trans Move Logistics** கம்பனி தனது செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காக சமீபத்தில் GPS கண்காணிப்பு (tracking), தன்னியக்க களஞ்சியசாலை முறைமைகள் (automated warehouse systems) மற்றும் நிகழ்நிலை விநியோக அட்டவணைப்படுத்தல் (online delivery scheduling) ஆகியவற்றை அறிமுகப்படுத்தியது. இலங்கை பூராகவும் பொருள்களை கொண்டு செல்கின்ற இக்கம்பனி, விநியோகத் தாமதங்களையும் செயற்பாட்டுச் செலவுகளையும் குறைப்பதற்கான நோக்கத்தைக் கொண்டுள்ளது. முகாமையாளர்கள் செயற்பாடுகள் மீதான கட்டுப்பாடுகளைப் பேணுவதற்கு எரிபொருள் பயன்பாடு, வாகனப் பராமரிப்பு, ஊழியர்களின் செயலாற்றுகை மற்றும் வாடிக்கையாளர் முறைப்பாடுகளை தொடர்ந்து கண்காணிக்கின்றனர். இக்கம்பனி ஓடர்களைப் பெற்றுக் கொள்ளல், பொருள்களைப் பொதி செய்தல், வாகனங்களில் பொருள்களை ஏற்றுதல், கொண்டு செல்லுதல் மற்றும் வாடிக்கையாளர்களுக்கான இறுதி விநியோகம் போன்ற பல உற்பத்திப் படிமுறைகளைப் பின்பற்றுகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **Trans Move Logistics** இன் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் இரண்டு (02) பிரதான தொழிற்பாடுகளை (functions) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(b) **Trans Move Logistics** இன் செயற்பாடுகள் மீதான புதிய தொழினுட்பவியலின் இரண்டு (02) தாக்கங்களை (impacts) **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) **Trans Move Logistics** இன் செயற்பாட்டு முகாமைத்துவத்தில் பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) புதிய தொழினுட்பவியல்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**Fresh Bite Foods** என்பது ஒரு வளர்ந்துவரும் கம்பனி ஆகும். நிறுவனத்தின் செயற்றிறனை மேம்படுத்துவதற்காக, மனித வளப் பிரிவு (HRD) திறமையான ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்கிறது, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துகிறது மற்றும் ஊழியர்களின் செயற்றிறனைத் தொடர்ந்து மதிப்பிடுகிறது. சமீபத்தில், **Fresh Bite Foods** ஆனது வினைத்திறனையும் ஊழியர் முகாமையையும் மேம்படுத்த நிகழ்நிலை ஆட்சேர்ப்பு, ஊழியர் சுய சேவை இணைய நுழைவுவழிகள் (self-service portals) மற்றும் AI அடிப்படையிலான வரவுக் கண்காணிப்பு போன்ற டிஜிடல்மயப்படுத்தப்பட்ட மனித வள முறைமையை அறிமுகப்படுத்தியது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **Fresh Bite Foods** இற்கு மனித வள முகாமையின் மூன்று (03) முக்கியத்துவங்களை (importances) **விவரிக்க.** (06 புள்ளிகள்)

(b) **Fresh Bite Foods** இற்குப் பிரயோகிக்கத்தக்க இரண்டு (02) பயிற்சி முறைகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) **Fresh Bite Foods** இன் மனித வள முகாமைக்காகக் கவனத்திற் கொள்ளக்கூடிய இரண்டு (02) புத்தாக்கங்களைக் (innovations) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 06

**Green Harvest Agro Ltd.** என்பது இலங்கை முழுவதும் உள்ள சிறப்பங்காடிகள் மற்றும் ஹோட்டல்களுக்கு மரக்கறிகளையும் பழவகைகளையும் வழங்கும் ஒரு வேளாண் வணிகக் கம்பனி ஆகும். மேலும் இக்கம்பனி பல நாடுகளுக்கும் அதனது உற்பத்திகளை ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது. புத்துணர்ச்சியான உற்பத்திப் பொருள்கள் குறைந்தபட்ச விரயத்துடன் உரிய நேரத்தில் விநியோகம் செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக இக்கம்பனி பயனுறுதிவாய்ந்த வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் குறித்து கவனம் செலுத்துகிறது. சந்தைப்படுத்தல் பிரிவானது வாடிக்கையாளர்களை ஈர்க்கவும் விற்பனையை அதிகரிக்கவும் விலையிடல், விளம்பரம், பொதி செய்தல், மற்றும் விநியோகத் தந்திரோபாயங்களைப் பயன்படுத்துகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) **Green Harvest Agro Ltd.** வழங்கல் சங்கிலியை முகாமை செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) தந்திரோபாயங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) **Green Harvest Agro Ltd.** இற்கு பயனுறுதிவாய்ந்த வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தின் இரண்டு (02) முக்கியத்துவங்களை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) வாடிக்கையாளர்களை ஈர்ப்பதற்கும் விற்பனையை அதிகரிக்கவும் **Green Harvest Agro Ltd.** பயன்படுத்தக்கூடிய இரண்டு (02) விலையிடல் முறைகளை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 07

**Desert Wave Logistics Ltd.** என்பது மத்திய கிழக்கில் உள்ள பல நாடுகளில் இயங்குகின்ற ஒரு நடுத்தர அளவிலான கப்பற் போக்குவரத்து மற்றும் தளவாட வழங்கல் (logistics) கம்பனி ஆகும். தற்போது நடைபெற்று வருகின்ற பிராந்திய மோதல் மற்றும் பொருளாதார ஸ்திரமற்றதன்மை ஆகியவை, சீர்குலைந்த வர்த்தகப் பாதைகள், எரிபொருள் விலைகளின் ஏற்ற இறக்கங்கள், திடீர் ஒழுங்குமுறை மாற்றங்கள் மற்றும் எல்லைச் சோதனைச் சாவடிகளில் கணிக்க முடியாத தாமதங்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட சவால்களை கம்பனிக்கு உருவாக்கியுள்ளன. இத்தகைய சவால்கள் உரிய நேரத்தில் விநியோகங்களைப் பராமரிக்கவும் செயற்பாட்டுச் செலவுகளை முகாமை செய்யவும் வாடிக்கையாளர் திருப்தியை உறுதி செய்யவும் கம்பனி மீது குறிப்பிடத்தக்க அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளன.

இத்தகைய சிக்கல்களைச் சமாளிப்பதற்கு, **Desert Wave Logistics Ltd.** நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதும், விரைவான செயற்பாட்டுத் தீர்மானங்களை எடுப்பதும், நிகழ் நேரத்தில் தந்திரோபாயங்களை மாற்றியமைப்பதும் அனைத்து மட்டங்களிலும் உள்ள முகாமையாளர்களைச் சார்ந்துள்ளது. உயர் முகாமைத்துவத்தின் வழிகாட்டல்களைச் செயற்படுத்தக்கூடிய திட்டங்களாக மாற்றுவதில் இடை மட்ட முகாமையாளர்கள் . முக்கிய வகிபாகத்தை ஆற்றுகின்ற அதே வேளை, முதல் வரிசை முகாமையாளர்கள் அன்றாடச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்து, அவர்களுடைய குழுக்கள் இற்றைப்படுத்தப்பட்ட நெறிமுறைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்கின்றனர். இதற்கிடையில், சந்தைப்படுத்தல் அணியானது நம்பிக்கையையும் விசுவாசத்தையும் பேணும் பொருட்டு, கம்பனியின் சேவைகளினது நம்பகத்தன்மையையும் பாதுகாப்பையும் வலியுறுத்தும் வகையில் அதன் பிரச்சாரங்களைச் சரிசெய்துள்ளதுடன், நெகிழ்ச்சியான விலையிடல் தந்திரோபாயங்களையும் அறிமுகப்படுத்தி, மாற்றங்கள் பற்றி சேவைநாடுநர்களுக்கு உடனடியாகவே அறிவிக்கிறது. மேலும், பயிற்சி மற்றும் அபிவிருத்திக்கான தேவையைப் புரிந்துகொண்டு, உயர் மட்ட முகாமையானது அவற்றை ஊக்குவிக்கிறது.

உயர் மட்ட முகாமை புவிசார் அரசியல் சூழல், எரிபொருள் விலைப் போக்குகள் மற்றும் ஒழுங்குமுறை இற்றைப்படுத்தல்களைத் தொடர்ந்து கண்காணிப்பதுடன், அதற்கேற்க கம்பனியின் நீண்ட காலத் தந்திரோபாயத்தைச் சரிசெய்கிறது. சவாலான சூழ்நிலைகளில் கம்பனி போட்டித்தன்மையுடனும், மீள்திறனுடனும், சேவைநாடுநரின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்திசெய்யும் இயலுமையுடனும் இருப்பதை உறுதி செய்வதற்கு, தலைமைத்துவமானது தந்திரோபாயச் சிந்தனை, நெகிழ்வுத்தன்மை மற்றும் முன்கூட்டியே சிக்கல்களைத் தீர்த்தல் ஆகியவற்றை வலியுறுத்துகிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை:**

(a) வெவ்வேறு மட்டங்களிலும் உள்ள முகாமையாளர்களுக்குத் தேவைப்படும் இரண்டு (02) பிரதான திறன்களை (key skills) றொபேட் எல்.காட்ஸ் இன் கூற்றிற்கிணங்க **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(b) நெருக்கடியின்போது, **Desert Wave Logistics Ltd.** பயன்படுத்திய சந்தைப்படுத்தல் கலவையின் இரண்டு (02) கூறுகளை **விவரிக்க.** (04 புள்ளிகள்)

(c) **Desert Wave Logistics Ltd.** இற்கு டிஜிடல் சந்தைப்படுத்தலால் ஏற்படக்கூடிய நான்கு (04) அனுகூலங்களைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(d) **Desert Wave Logistics Ltd.** இன் மாற்றங்களை ஏற்றுக் கொள்வதற்காக ஊழியர்களை ஊக்குவிக்கும் மூன்று (03) வழிகளை (ways) குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(e) **Desert Wave Logistics Ltd.** இன் தந்திரோபாயத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய இரண்டு (02) வெளிப்புறக் காரணிகளை **அடையாளங் கண்டு,** அவ்வொவ்வொரு காரணியும் **Desert Wave Logistics Ltd.** இன் தந்திரோபாயத் தீர்மானங்களை (strategic decisions) எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதை **விவரிக்க.** (06 புள்ளிகள்)

(f) **Desert Wave Logistics Ltd.** ஒரு பயனுறுதிவாய்ந்த பயிற்சி ஊடாகப் பெற்றுக்கொள்ளும் நான்கு (04) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக் கருக்கள், அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விவரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாக தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்க/ கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிபு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்க (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்க (Present) | தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |
| **பகுப்பாய்வு**<br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படை யில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்பை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக் கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |